**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**
**பெரிய திருமொழி**
**இரண்டாம் பத்து**

**மூன்றாம் திருமொழி - விற்பெரு விழவும்**
**திருவல்லிக்கேணி**

** விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் *
வேழமும் பாகனும் வீழ *
செற்றவன் தன்னை புரம் எரி செய்த *
சிவன் உறு துயர் களை தேவை **
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு *
பார்த்தன் தன் தேர் முன் நின்றானை *
சிற்றவை பணியால் முடி துறந்தானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 1

** வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை *
விழுமிய முனிவர் விழுங்கும் *
கோதில் இன்கனியை நந்தனார் களிற்றைக் *
குவலயத்தோர் தொழுது ஏத்தும் **
ஆதியை அமுதை என்னை ஆளுடை அப்பனை *
ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் * மாட மா மயிலைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 2

வஞ்சனை செய்யத் தாய் உருவாகி *
வந்த பேய் அலறி மண் சேர *
நஞ்சமர் முலையூடு உயிர் செக உண்ட *
நாதனைத் தானவர் கூற்றை **
விஞ்சை வானவர் சாரணர் சித்தர் *
வியந்துதி செய்யப் பெண் உருவாகி *
அஞ்சுவை அமுதம் அன்று அளித்தானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 3

இந்திரனுக்கு என்று ஆயர்கள் எடுத்த *
எழில் விழவில் பழ நடை செய் *
மந்திர விதியில் பூசனை பெறாது *
மழை பொழிந்திடத் தளர்ந்து ** ஆயர்
எந்தம்மோடு இன ஆநிரை தளராமல் *
எம்பெருமான்! அருள் என்ன *
அந்தமில் வரையால் மழை தடுத்தானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 4

இன் துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும் இன்பன் *
நற்புவி தனக்கு இறைவன் *
தன் துணை ஆயர் பாவை நப்பின்னை தனக்கு இறை *
மற்றையோர்க்கு எல்லாம்
வன் துணை ** பஞ்ச பாண்டவர்க்காகி வாயுரை
தூது சென்று * இயங்கும்
என் துணை * எந்தை தந்தை தம்மானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 5

அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கு
இளையவன் * அணியிழையைச் சென்று *
எந்தமக்கு உரிமை செய் எனத் தரியாது *
எம்பெருமான்! அருள் என்ன **
சந்தமல் குழலாள் அலக்கண் நூற்றுவர் தம் *
பெண்டிரும் எய்தி நூல் இழப்ப *
இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 6

** பரதனும் தம்பி சத்துருக்கனனும் *
இலக்குமனோடு மைதிலியும் *
இரவு நன்பகலும் துதி செய்ய நின்ற *
இராவணாந்தகனை எம்மானை **
குரவமே கமழும் குளிர் பொழிலூடு *
குயிலொடு மயில்கள் நின்றால *
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 7

** பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் *
வாயில் ஓர் ஆயிர நாமம் *
ஒள்ளியவாகிப் போத ஆங்கு அதனுக்கு *
ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி **
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் *
பிறை எயிற்றனல் விழி பேழ்வாய் *
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 8

** மீன் அமர் பொய்கை நாள் மலர் கொய்வான் *
வேட்கையினோடு சென்று இழிந்த *
கான் அமர் வேழம் கை எடுத்து அலறக் *
கரா அதன் காலினைக் கதுவ **
ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து *
சென்று நின்று ஆழி தொட்டானை *
தேன் அமர் சோலை மாட மா மயிலைத் *
திருவல்லிக்கேணிக் கண்டேனே 9

** மன்னு தண்பொழிலும் வாவியும் மதிளும் *
மாட மாளிகையும் மண்டபமும் *
தென்னன் தொண்டையர் கோன் செய்த நல் மயிலைத் *
திருவல்லிக்கேணி நின்றானை **
கன்னி நன்மாட மங்கையர் தலைவன் *
காமரு சீர்க் கலிகன்றி *
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார் *
சுகம் இனிதாள்வர் வானுலகே 10

**அடிவரவு:** வில் வேதத்தை வஞ்சனை இந்திரனுக்கு இன்துணை அந்தகன் பரதன் பள்ளியில் மீனமர் மன்னு அன்றாயர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---